திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 45/1980), திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

3. தனித்தீர்மானம்

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம். திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர்களுள் ஒருவர் அந்தத் தீர்மானத்தை முன்மொழிவார்.

திரு என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, வழக்கம் என்ன என்றால் அவசரச் சட்டத்தை ஆதரித்து அரசாங்கத்திடமிருந்து மசோதா கொண்டு வந்தால் அப்போது நிராகரிக்கக் கேட்டு பேசுவதுதான் வழக்கம். ஆனால் இப்போது கவர்ன்மெண்ட் அதைக் கொண்டுவரவில்லை. அது நாளையோடு காலாவதியாகிறது. எங்களை மாதிரி ஆட்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. அது செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு அபிப்ராயம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே எப்படி வரும் என்றுகேட்கிறேன்.

1983 மார்ச்சு 4]

[பிற்பகல் 1 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவசர சட்டம் இன்றைக்கு காலாவதி ஆகிறது; ஆகவே அவசரமாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டால் பிரச்னை தீர்ந்து விடும். உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, விதி 181-ன் படி..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு வேண்டாம். இது பற்றி பேசி விட்டு பிறகு எடுத்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 5—3—1983 காலை 11 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

165. சென்னை பெருநகர்ப் பகுதி எஸ். 1 (பகுதி)-ஆம் எண்ணுள்ள பாலவாக்கம் கிராமத்திற்கான பெரும் திட்டத்தில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமான வீட்டு வசதி-நகர் வளர்ச்சித் துறையின் 20—7—1982-ஆம் தேதியிடப்பெற்ற 656-ஆம் எண்: அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகரத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].